# February 17, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் அனைத்து வயது பெண்களும் நுழைய அனுமதி அளித்த செப்டம்பர் 2018 தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மறுஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்றத்தின் 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்கும்.

(i) நீதித்துறை அமர்வு மற்றும் பின்னணி

- 2018 ஆம் ஆண்டு தீர்ப்பு கேரளா முழுவதும் பரவலான போராட்டங்களைத் தூண்டியது, இதனால் பல்வேறு குழுக்கள் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த மறுஆய்வு மனுக்களை தாக்கல் செய்ய வழிவகுத்தது.
- தற்போதைய நடவடிக்கைகள் நீதிபதி சூர்யா காந்த், நீதிபதி ஜமாலா பக்சி மற்றும் நீதிபதி பிபுல் எம். பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் கொண்டுவரப்பட்டன. இறுதி விசாரணைக்கு தலைமை நீதிபதி முறையாக 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு அமைப்பார் என்று அவர் குறிப்பிட்டார்.

(ii) விசாரணைகளுக்கான திட்டமிடப்பட்ட காலக்கெடு

- முறையான விசாரணை ஏப்ரல் 7, 2026 அன்று காலை 10:30 மணிக்கு தொடங்க உள்ளது.
- ஏப்ரல் 7–9, 2026 - மனுதாரர்கள் மற்றும் 2018 தீர்ப்பை மறுஆய்வு செய்ய ஆதரிப்பவர்களின் வாதங்களை நீதிமன்றம் கேட்கும்.
- ஏப்ரல் 14–16, 2026 - மறுஆய்வை எதிர்ப்பவர்களின் (முதல் 2018 தீர்ப்பை ஆதரிப்பவர்களின்) வாதங்களை நீதிமன்றம் கேட்கும்.
- முடிவு: அனைத்து வாதங்களும் ஏப்ரல் 22, 2026 க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தாக்கல் செய்வதற்கான காலக்கெடு: சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் மார்ச் 14, 2026 க்குள் தங்கள் முறையான மனுக்களை தாக்கல் செய்ய வேண்டும்.

(iii) ஏழு கேள்விகள் :-

நவம்பர் 2019 முதற்கட்ட உத்தரவில் முதலில் எழுப்பப்பட்ட ஏழு சட்ட கேள்விகளைத் தீர்ப்பதில் 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு கவனம் செலுத்தும்.

- அரசியலமைப்பின் பிரிவு 25 இன் கீழ் மத சுதந்திரத்திற்கான உரிமையின் அளவை வரையறுத்தல்.
- தனிப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கும் மதப் பிரிவுகள் தங்கள் சொந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான உரிமைகளுக்கும் இடையிலான மோதலை நிவர்த்தி செய்தல்.
- ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேராத ஒருவர் பொது நல வழக்கு (PIL) மூலம் அதன் உள் நடைமுறைகளை சவால் செய்ய சட்டப்பூர்வ உரிமை உள்ளதா என்பதைத் தீர்மானித்தல்.

(iv) இந்த அமர்வு சபரிமலை கோயில் வழக்குடன் மட்டும் நின்றுவிடாது, மாறாக மத ரீதியான பாலினப் பிரச்சினைகளையும் ஆராயும் என்று உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது, அவற்றுள் :-

- மசூதிகள் மற்றும் தர்காக்களில் முஸ்லிம் பெண்கள் நுழைதல்.
- பார்சி பெண்கள் (குறிப்பாக பார்சிகள் அல்லாதவர்களை மணந்தவர்கள்) தங்கள் வழிபாட்டுத் தலங்களுக்குள் நுழைவதற்கான மத உரிமைகள்.

(v) முக்கிய பங்குதாரர்களின் நிலைப்பாடுகள்

- மத்திய அரசு: 2018 ஆம் ஆண்டு தீர்ப்புக்கு எதிரான மறுஆய்வு மனுக்களை மத்திய அரசு ஆதரிப்பதாக சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா தெரிவித்தார்.

- கேரள மாநில அரசு: ஏழு சட்டக் கேள்விகள் குறித்து நீதிமன்றத்தின் முடிவுக்காக மாநிலம் காத்திருப்பதாக சட்ட அமைச்சர் பி. ராஜீவ் குறிப்பிட்டார். சட்டச் சிக்கல்களை ஒரே நொடியில் தீர்க்க முடியாது என்றும், நீதிமன்றத்தின் தெளிவின் அடிப்படையில் மாநிலம் தனது அடுத்த கட்ட நடவடிக்கைகளை முடிவு செய்யும் என்றும் அவர் வலியுறுத்தினார்..
- அரசியல் கட்சிகள்: கேரளாவில் ஆளும் கட்சியான சிபிஐ(எம்) 2018 தீர்ப்பை முன்பு ஆதரித்ததாகக் கூறியது, ஆனால் மாநில அரசின் சட்டப்பூர்வ நிலைப்பாடு கட்சியின் சித்தாந்த நிலைப்பாட்டைச் சார்ந்து இல்லாமல் இருக்கலாம் என்று தெளிவுபடுத்தியது.
- இந்து அமைப்புகள்: நாயர் சர்வீஸ் சொசைட்டி (NSS) மற்றும் SNDP போன்ற குழுக்கள் பெண்கள் நுழைவது தொடர்பான பாரம்பரிய பழக்கவழக்கங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறி தங்கள் எதிர்ப்பில் உறுதியாக உள்ளன.

2. செயற்கை நுண் ணறிவின் (ஏஐ) தாக்கம் தொடர்பான உச்சி மாநாட்டை தில்லி பாரத மண்டபத்தில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.

(i) ஏஐ தாக்க உச்சி மாநாடு 2026, தில்லி பாரத மண்டபத்தில் பிப்.20 வரை 5 நாள்கள் நடைபெறுகிறது. மாநாட்டின் ஒரு பகுதியாக ஏஐ தொழில்நுட்பக் கண்காட்சியும் இடம்பெற்றுள்ளது.

(ii) ஏஐ தொழில்நுட்பத்தில் சர்வதேச ஒத்துழைப்பை விளக்கும் வகையில் ரஷியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஸ்விட்சர்லாந்து, செர்பியா, எஸ்தோனியா, தஜிகிஸ்தான், ஆப்பிரிக்கா ஆகிய 13 நாடுகளின் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

(iii) ஏஐ தாக்கம் தொடர்பான உச்சி மாநாட்டில் ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான், பிரேஸில் அதிபர் லூலா டாசில்வா உள்பட 45 நாடுகளின் அமைச்சக பிரதிநிதிகளும், கூகுள், ஓபன் ஏஐ. மைக்ரோசாஃப்ட் உள்ளிட்ட தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளும் பங்கேற்கின்றனர்.

(iv) கல்வி,சுகாதாரம், வேளாண்மை, நிர்வாகம் மற்றும் வணிகம் எனப் துறைகளிலும் ஏஐ பல்வேறு துறைக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரு கிறது. இந்தச் சூழலில் இந்தியாவில் நடைபெறும் உச்சி மாநாட்டில் ஏஐ புத்தாக்கம், ஒத்துழைப்பு மற்றும் பொறுப்பான தொழில்நுட்பப் பயன்பாடு போன்ற அம்சங்கள் விவாதிக்கப்பட உள்ளன.

(v) எண்ம பொது உள்கட்டமைப்பு முதல் ஆற்றல் மிகுந்த புத்தாக்கம் வரை அனைத்துத் துறைகளிலும் ஏஐ பயன்பாட்டில் இந்தியா வளர்ச்சியடைந்து வருகிறது' என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

3.நாடாளுமன்ற அலுவல் மொழிக் குழுவின் 13-ஆவது அறிக்கையை குடியரசுத் தலைவர் திரௌபதி மூர்முவிடம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சமர்ப்பித்தார்.

(i) இது தொடர்பாக அமித் ஷா 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'நாடாளுமன்ற அலுவல் மொழிக் குழு உறுப்பினர்களுடன் இணைந்து குழு வின் 13-ஆவது அறிக்கை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

(ii) இந்தக் குழுவின் பணியை துரிதப்படுத்த வேண்டும், அலுவல் மொழியை நவீனமயமாக்கி மேலும் வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கில், கடந்த 6 ஆண்டுகளில் 4 அறிக்கைகளை குடியரசுத் தலைவரிடம் குழு ஒப்படைத்துள்ளது' என்று தெரிவித்தார்.

4. தமிழக சட்டப்பேரவையில் 2026-27-ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு செவ்வாய்க்கிழமை (பிப். 17) தாக்கல் செய்யவுள்ளார். தொடர்ந்து, இடைக்கால வேளாண் நிதிநிலை அறிக்கையை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல் வம் தாக்கல் செய்யவுள்ளார்.

(i) தேர்தல் ஆண்டு என்பதால் இடைக் கால நிதிநிலை அறிக்கையில், பல்வேறு சலுகை அறிவிப்புகள் இடம்பெறக்கூ டும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

(ii) ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி இறுதி அல்லது மார்ச் முதல் வாரத்தில் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கான சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெறுவது வழக்கம். நிகழாண்டில் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளதால் இடைக்கால நிதிநிலை அறிக்கையாக தாக்கல் செய்யப்படுகிறது.

(iii) தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதமாக உள்ளது. இது, நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட ஏறத்தாழ இரு மடங்கு என பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 2025-26-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கையை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

(v) பொருளாதார ஆய்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

- தமிழகத்தில் தனிநபர் வருமானம் ரூ.3.62 லட்சமாக உயர்ந்துள்ளது. இது நாட்டின் சராசரியை விட 1.77 மடங்கு அதிகம்.
- உற்பத்தித் தொழில் துறை 14.74 சதவீத வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்துள்ளது. இது தேசிய சராசரியான 4.5 சதவீதத்தைவிட மும்மடங்கு அதிகம்.
- நாட்டின்மொத்த உற்பத்தித் துறை வேலைவாய்ப்பில் 15 சதவீத பங்களிப்பை வழங்கி, அனைத்து மாநிலங்களையும்விட தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- கல்வி, ஆரோக்கியம், சமூக நலத் திட்டங்களுக்காக ரூ.1.57 லட்சம் கோடி செலவிடப்பட்டுள்ளது.
- தொழிலாளர் பங்கேற்பு 72.1 சதவீதமாக உயர்ந்திருக்கும் நிலையில், வேலையின்மை 3.5 சதவீதமாக குறைந்துள்ளது.
- வலுவான உற்பத்தித் திறன், மனித மூலதனம் ஆகியவற்றுடன் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டும் இலக்கை தமிழகம் நிர்ணயித்துள்ளது.
- 52.07 பில்லியன் டாலர் மதிப்பை எட்டும் வகையில் தமிழகத்திலிருந்து வணிகப் பொருள்களின் ஏற்றுமதி ஏறத்தாழ இரட்டிப்பாகியுள்ளது. அந்நிய நேரடி முதலீடு உயர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- திட்டக் குழு செயல் துணைத் தலைவர் ஜெயரஞ்சன் கூறுகையில், நிகழாண்டு அறிக்கையில் பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு குறித்து தனி அத்தியாயம் இடம்பெற்றுள்ளது.
- 1,076 கி.மீ. கடற்கரையைக் கொண்ட தமிழகத்தின் கடல் சார் பொருளாதார வளர்ச்சி குறித்த புதிய திட்டங்கள், 2030-க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டுவதற்கான இலக்கு உள்ளிட்டவை இந்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள் என்றார் அவர்.

5. உலகின் முன்னணி செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்ப நிறுவனமான 'ஆன்த்ரோபிக்', ஆசியாவில் தனது 2-ஆவது அலுவலகத்தை பெங்களூரில் தொடங்கியது.

(i) 'கிளாட்' எனும் நவீன ஏஐ மென்பொருளை உருவாக்கிப் புகழ்பெற்ற இந்நிறுவனம், இந்தியாவில் தனது பயணத்தின் தொடக்கமாக ஏர் இந்தியா, ரேஸர்பே, கிரெட் போன்ற பிரபல நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. வெறும் வணிகம் மட்டுமின்றி, சமூக மேம்பாட்டு நோக்கத்துடன் இந்திய மொழிகளில் ஏஐ சேவைகளை வழங்கவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

(ii) ஆன்த்ரோபிக் நிறுவனத்தின் இந்தியப் பிரிவு இயக்குநர் இரினா கோஷ் இது குறித்துக் கூறுகையில், 'பொறுப்பான முறையில் ஏஐ தொழில்நுட்பத்தை உலகுக்கு கொண்டுசெல்ல இந்தியா ஒரு மிகச் சிறந்த இடம். இந்தியாவின் தொழில்நுட்பத் திறமையும், எண்மக் கட்டமைப்பும் வியக்கத்தக்கது' என்றார்.

(iii) ஆன்த்ரோபிக் நிறுவனத்தின் புதிய ஏஐ கருவிகளின் அறிமுகம், தகவல் தொழில்நுட்பத் துறையில் மனித உழைப்பின் தேவையைக் குறைக்கும் என்ற அச்சத்தால், அண்மையில் 'நிஃப்டி ஐடி' குறியீடு ஒரே நாளில் சுமார் 6 சதவீதம் வரை சரிந்து, முதலீட்டாளர்களுக்கு ரூ.2 லட்சம் கோடி வரை இழப்பை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

6. பாலஸ்தீனத்தின் மேற்கு கரை பகுதியில் யூதக் குடியேற்றங்களை விரிவுபடுத்தும் நோக்கில், அங்குள்ள நிலங்களை இஸ்ரேல் அரசுடன் முறைப்படி பதிவு செய்யும் புதிய நடைமுறைக்கு அந்நாட்டு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

(i) 1967 மத்திய கிழக்கு போருக்குப் பிறகு, மேற்கு கரையில் இத்தகைய நிலப்பதிவு நடவடிக்கையை இஸ்ரேல் முதல்முறையாக மேற்கொள்கிறது.

(ii) பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் அமைச்சரவையின் இந்த முடிவு, 'யூதக் குடியேற்றங்களை வலுப்படுத்தும் ஒரு புரட்சிகரமான நடவடிக்கை' என அந்நாட்டு நிதி அமைச்சர் பெசலல் ஸ்மோட்ரிச் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

(iii) இஸ்ரேலின் இந்த நடவடிக் கைக்கு பாலஸ்தீன நிர்வாகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது மேற்கு கரை பகுதியை இஸ்ரேலுடன் முழுமையாக இணைத்துக் கொள்வதற்கான மறைமுக முயற்சி என்றும், பாலஸ்தீனர்களின் தனிநாட்டுக் கனவைச் சிதைக்கும் செயல் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

(iv) இந்த நிலப்பதிவு நடவடிக்கையால் மேற்கு கரையில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட நிலங்களை பாலஸ்தீனர்கள் இழக்க நேரிடும் என்று மனித உரிமை அமைப்புகள் எச்சரித்துள்ளன.

(v) மேற்கு ஆக்கிரமிக்கப்பட்ட கரை பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் குடியேற்றங்கள் சட்டவிரோதமானவை என்று சர்வதேச நீதிமன்றம் ஏற்கெனவே தெரிவித்திருந்தது. இருப்பினும், இந்தக் குடியேற்ற விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்த, காஸா அமைதித் திட்டத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் எந்த அழுத்தமும் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(vi) இஸ்ரேலில் நடப்பாண்டு இறுதியில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தனது செல்வாக்கை உயர்த்தவே பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசு இத்தகைய முடிவுகளை எடுப்பதாக சர்வதேச அளவில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

(vii) காஸா மறுசீரமைப்புக்காக 500 கோடி டாலருக்கும் அதிகமான தொகையை நிதியுதவியாக வழங்க, அமைதிக் குழுவின் உறுப்பு நாடுகள் உறுதியளித்துள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

- அமைதிக் குழுவின் முதல் அதிகாரபூர்வ ஆலோசனைக் கூட்டம் வாஷிங்டனில் உள்ள டொனால்ட் டிரம்ப் அமைதி மையத்தில் வரும் வியாழக்கிழமை நடைபெறுகிறது' என்றார். இக்கூட்டத்தில் 20-க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். அப்போது நிதி ஒதுக்கீடு மற்றும் அமைதிப்படைகளை அனுப்புவது குறித்த முக்கிய அறிவிப்புகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. பிரிட்டன் மற்றும் கனடா நாட்டு குடிமக்கள், இனி விசா (நுழைவு இசைவு) இல்லாமலேயே சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளலாம்' என்று சீன அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

(i) சுற்றுலா, வர்த்தகம், கல்வி தொடர்பான திட்டங்கள் அல்லது உறவினர்களைச் சந்திப்பது போன்ற காரணங்களுக்காகச் செல்பவர்கள், சீனாவில் 30 நாள்கள்வரை விசா இன்றி தங்கலாம். இந்தப் புதிய நடைமுறை செவ்வாய்க்கிழமை (பிப். 17) முதல் உடனடியாக அமலுக்கு வருகிறது.

(ii) பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர், கனடா பிரதமர் மார்க் கார்னி ஆகியோர் அண்மையில் சீனாவுக்கு மேற்கொண்ட பயணங்களைத் தொடர்ந்து, அந்த நாடுகளுடனான உறவை மேம்படுத்தும் ஒரு முயற்சியாக சீனா இந்த விசா சலுகையை வழங்கியுள்ளது.

(iii) இந்த அறிவிப்பின் மூலம், சீனாவுக்கு விசா இன்றி செல்ல அனுமதி பெற்றுள்ள நாடுகளின் எண்ணிக்கை தற்போது 79-ஆக அதிகரித்துள்ளது.

(iv) கடந்த காலங்களில் சீனாவுக்கான விசா பெறும் நடைமுறை மிகவும் கடினமானதாகக் கருதப்பட்டது. ஆனால், கடந்த 2 ஆண்டுகளாகவே உலக நாடுகளுடனான தனது தொடர்பை வலுப்படுத்த, சீனா தனது விசா விலக்குத் திட்டத்தை வேகமாக விரிவாக்கம் செய்துவருகிறது.

8. இந்திய தரச்சான்று ஆணைய (பிஐஎஸ்) நடைமுறைகளுக்கு உட்படாத வகையிலும், பொம்மைகள் தரக் கட்டுப்பாட்டு உத்தரவு 2020-க்கு உட்படாத வகையிலும் பொம்மைகளை விற்பனை செய்ததற்காக 'ஸ்னாப்டீல்' இணைய வணிக நிறுவனத்துக்கு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (சிசிபிஏ) ரூ.5 லட்சம் அபராதம் விதித்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக தாமாக முன்வந்து மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இந்த அபராதத்துக்கான இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது' என்று சிசிபிஏ தலைமை ஆணையர் நிதி கரே தெரிவித்தார்.

(i) இந்த அபராதம்மட்டுமன்றி, வரும்காலங்களில் இதுபோன்ற பிஐஎஸ் தரத்துக்கு உட்படாத பொம்மைகளை தனது இணைய வணிக பக்கத்தில் பட்டியலிடவோ, விளம்பரப்படுத்தவோ மாட்டோம் என்பதை' ஸ்னாப்டீல்' உறுதி செய்ய வேண்டும். மேலும், நுகர்வோரின் குறைகளுக்கு உரிய தீர்வு காணும் வகையில் இணைய வணிக நிறுவனத்தை தொடர்பு கொள்வதற்கான தொடர்பு எண், மின் னஞ்சல் முகவரி மற்றும் குறைதீர்ப்பு அலுவலரின் விவரங்களை நன்கு தெரியக்கூடிய வகையில் ‘ஸ்னாப்டீல்' காட்சிப்படுத்த வேண்டும் என்றும் தனது உத்தரவில் சிசிபிஏ குறிப்பிட்டுள்ளது.

9.தொழில் நிறுவனம் என்ற வார்த்தைக்கு வரையறை செய்வது தொடர்பான சர்ச்சைக்குரிய விவகாரம் குறித்து உச்சநீதிமன்றத்தில் மார்ச் 17-ஆம் தேதி முதல் 9 நீதிபதிகள் அமர்வு விசாரணை நடத்தவுள்ளது.

10. மத்திய, மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு அறிக்கையின் முதல் பாகம் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

(i) மத்திய, மாநில உறவுகள் குறித்து அறிக்கை தயாரிக்க தமிழக அரசால், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் கடந்த 2015 ஏப். 15-இல் உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. இதில் இந்திய கடல்சார் பல்கலையின் முன்னாள் துணைவேந்தர் கே.அசோக் வர்தன் ஷெட்டி, தமிழ்நாடு திட்டக் குழுவின் முன்னாள் துணைத் தலைவர் மு.நாகநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

(ii) மத்திய-மாநில உறவுகள் குறித்து தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்ட நான்காவது முக்கியமான ஆய்வு இது. மேலும், ராஜமன்னார் குழு (1969-71) வழியாக, மத்திய- மாநில உறவுகள் குறித்த உரையாடலை முன்னெடுத்த தமிழ்நாட்டின் இரண்டாவது முயற்சியாகும்.

(iii) தேசிய அளவில், சர்க்காரியா ஆணையம் (1983–88) மற்றும் பூஞ்சி ஆணையம் (2007-10) ஆகியவை மத்திய-மாநில உறவுகளை ஆய்வு செய்து பல்வேறு பரிந்துரைகளை வழங்கியுள்ளன.

(iv) இந்த ஆய்வுகளுக்குப் பிறகான காலத்தில் ஏற்பட்டுள்ள அரசமைப்பு, நிதி, மற்றும் நிறுவன அளவிலான வளர்ச்சி மாற்றங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒரு புதிய மற்றும் விரிவான ஆய்வின் அவசியம் கருதி, உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது.

(v) இந்தக் குழு அறிக்கையின் முதல் பாகமானது அதிகாரப் பரவலாக்கத்துக்கும், மாநில சுயாட்சிக்குமான வாதம், அரசமைப்புச் சட்டத் திருத்தம், மாநிலங்களின் ஆட்சிநில ஒருமைப்பாடு, மொழி, ஆளுநர், தொகுதி மறுவரையறை, தேர்தல்கள், கல்வி, சுகாதாரம், சரக்கு மற்றும் சேவை வரி என 10 இயல்களுடன் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(vi) கூட்டாட்சி முறைக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து விரிவான ஆய்வை மேற்கொண்டுள்ள இந்த அறிக்கை, அரசமைப்புச் சட்டத்தின் வரம்புக்குட்பட்டு கூட்டாட்சி முறையின் சமநிலையை மீட்டெடுக்கவும், உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை வலுப்படுத்தவும் உறுதியான மற்றும் திட்டவட்டமான பரிந்துரைகளை முன்வைக்கிறது.

(vii) முறையே 10 இயல்களைக் கொண்ட மேலும் இரண்டு பாகங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இந்த முயற்சியின் ஒரு சிறப்பம்சமாக, அறிக்கையின் தமிழ்ப் பதிப்புக்கு 'திறந்த நிலை அணுகல்' வழங்கப்பட்டுள்ளது. இது நாட்டிலேயே முதல்முறையாகும். இந்த அறிக்கை தமிழக சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, தமிழ் பதிப்பு தமிழக அரசின் அதிகாரபூர்வ இணையதளத்தில் பதிவேற்றப்படும்.

(viii) இந்த அறிக்கை, இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பின் பரிவளர்ச்சியில் தமிழகத்தின் தொடர்ச்சியான பங்களிப்பில் முக்கியமான மைல்கல்லாக இருக்கும். இதன் நோக்கம், மத்திய அரசை பலவீனப்படுத்துவது அல்ல; மாறாக மத்திய அரசின் அதிகாரத்தை முறைப்படுத்துவதாகும். இதன்மூலம் மத்திய அரசு தேசிய அளவிலான பொறுப்புகளில் கவனம் செலுத்த முடியும். அதேநேரம், மாநிலங்களுக்குத் தேவையான சுயாட்சியை மீட்டளிப்பதன் மூலம் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்ய முடியும். இந்த அறிக்கை ஆக்கபூர்வமான உரையாடல்களைத் தூண்டி சீரான மற்றும் கூட்டுறவு கூட்டாட்சி முறைக்கு வழிவகுக்கும் என தமிழக அரசு நம்புகிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11. மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் கொண்டுவந்துள்ள தீர்மான நோட்டீஸ் நடைமுறைகள், கடந்த ஏழு ஆண்டுகளாக நிரப்பப்படாமல் தவிர்க்கப்படும் மக்களவை துணைத் தலைவர் பதவிக்கான தேவையை உணர்த்தியுள்ளன.

(i) ஓம் பிர்லாவை பதவிநீக்கம் செய்யக் கோரும் எதிர்க்கட்சிகளின் தீர்மானம் மீது மார்ச் 9-ஆம் தேதி விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

(ii) இந்த நடவடிக்கை முடிவடையும் வரை ஓம் பிர்லாவால் அவையை வழிநடத்த முடியாது. அதே சமயம், அவரது இருக்கையில் அமர்ந்து மக்களவையை மூத்த உறுப்பினர்கள் குழு வழிநடத்தி வருகிறது.

(iii) 16-ஆம் மக்களவை (2014–2019) வரை துணைத் தலைவர் பதவி இருந்தது. அப்போது மக்களவைத் தலைவராக சுமித்ரா மகாஜனும், துணைத் தலைவராக அதிமுகவைச் சேர்ந்த மு.தம்பிதுரையும் இருந்தனர். 2019-2024 வரையிலான 17-ஆவது மக்களவையில் துணைத் தலைவர் பதவி அதன் முழு பதவிக் காலமும் நிரப்பப்படவில்லை. இது 18-ஆவது மக்களவையிலும் (2024-29) தொடர்கிறது.

இதனால், அவையை வழிநடத்தும் தலைவர்கள் குழு (பேனல் ஆஃப் சேர்மன்) தங்களுக்குள்ளாகவே நேரத்தை ஒதுக்கிக்கொண்டு முதல் பகுதி பட்ஜெட் கூட்டத்தொடர் அலுவல்களை வழிநடத்தியது.

(iv) இந்திய அரசமைப்பின் விதி 93-இன் படி மக்களவைத் தலைவர், துணைத் தலைவர் பதவிகள் காலியாகும்போது, அவை விரைவாக நிரப்பப்பட வேண்டும். ஆனால், அதற்கு காலக்கெடு நிர்ணயிக்கப்படவில்லை. இந்நிலையில், சமீபத்திய நிகழ்வுகள் மக்களவை துணைத் தலைவர் பதவிக்கான தேவையை உணர்த்துகின்றன.

(v) மக்களவைப் பதவி நெறிகளின்படி தலைவருக்கு அடுத்த உயரிய பதவியாக துணைத் தலைவர் பதவி உள்ளது. ஒரேயொரு வித்தியாசம், மக்களவைத் தலைவர் எந்தச் சூழலிலும் உறுப்பினராக சக உறுப்பினர்களுடன் அமர மாட்டார். விவாதங்களில் பங்கேற்க முடியாது. ஆனால், மக்களவைத் தலைவர் அவையை வழிநடத்தும் போது, அதன் துணைத் தலைவர் வழக்கமான உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்படுவார். முக்கிய விவாதங்களிலும் பங்கேற்றுப் பேச முடியும்.

(vi) மேலும், மக்களவை கலைக்கப்பட்ட பிறகும் கூட, மக்களவைத் தலைவரைப் போலவே துணைத் தலைவர் புதிய மக்களவை தேர்வாகி புதிய துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை அந்தப் பதவியில் தொடர்வார். மக்களவைத் தலைவர் இல்லாதபோது அவையை வழிநடத்துவது, உறுப்பினர்களின் ஆட்சேபகர பேச்சு மற்றும் பதிவுகளை நீக்குவது, புதிய உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பது, அவர்களின் நோட்டீஸ் மற்றும் பதவி விலகல் கடிதங்களைப் பெறுவது என அவரது அதிகாரங்களைக் குறிப்பிடலாம்.

(vii) ஆனால், இருவரின் ஒருவர் மீதோ, இருவரில் மீதோ பதவி நீக்க தீர்மானம், கொண்டுவரப்படும்போது அதன்

முடிவுகள் வெளியாகும்வரை அவர்களால் அவையை வழிநடத்த முடியாது என அரசமைப்பு விதி 96 கூறுகிறது.

(viii) மக்களவை மரபின்படி அதிலும் 11-ஆவது மக்களவைக்குப் பிறகு துணைத் தலைவர் பதவிக்குரியவர் எதிர்க்கட்சிகளின் வரிசையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். கட்சி சார்பற்ற செயல்பாட்டை ஊக்குவிக்க இந்த வழக்கம் மேற்கொள்ளப்பட்டாலும் இதை அரசமைப்பு விதிகள் கட்டாயப்படுத்தவில்லை.

(ix) இந்நிலையில், மக்களவை துணைத் தலைவர் பதவி தொடர்ந்து நிரப்பப்படாமல் இருப்பது, மக்களவைத் தலைவர் வசமே அனைத்து அதிகாரங்களும் குவிவதற்கு காரணமாகலாம் என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

(x) மக்களவைத் தலைவருக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் நோட்டீஸ் விவகாரத்தில் முடிவெடுக்கப்போவது யார் என்பதில் தொடர்ந்து குழப்பம் நிலவுகிறது. மக்களவைத் தலைவர் அல்லாத நேரத்தில் அவையை வழிநடத்தும் பணியை மூத்த உறுப்பினர்கள் குழு மேற்கொள்கிறது. ஆனால், இக்குழுவால் மக்களவைத் தலைவர் மீதான நோட்டீஸையோ, நடவடிக்கையையோ தன்னிச்சையாக அனுமதிக்க அதிகாரம் இல்லை. அப்படி யென்றால் முடிவெடுப்பது யார் என்ற குழப்பம் நிலவுகிறது.

துணைத் தலைவர் இருந்திருந்தால் இந்த நடைமுறைகளை ஒருங்கிணைத்திருப்பார். இது விவாதிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயம் என்கின்றனர் எம்.பி.க்கள்.